என்ற அளவில் கோப்பில் ஒரு ஆணையிட்டதன் காரணமாக இது வரையில், நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு எந்தவிதமான நிலத்தையும் மாற்றித் தரவில்லை. அதற்கான ஒரு கொள்கை குறிப்பு ஆய்விலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு தான் எங்கெங்கே கோயிலுக்கு தேவையில்லையோ, அவைகள் தான் தனியாருக்கோ அல்லது பொது நிறுவனங்களுக்கோ மாற்றி கொடுக்கப்படும். இதற்கு முன்பாகவே சட்டவிரோத மாக யார் யாரெல்லாம் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருக்கிறார் களோ, அந்த நிலங்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

சாத்தனூர் அணைப் பகுதியில் தங்கும் விடுதி, ஹோட்டல் அமைத்தல்.

*4429. திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், சாத்த னூர் அணைப் பகுதியில் சுற்றுலாத்துறை மூலமாக சிறிய அளவில் தங்கும் விடுதி, ஹோட்டல் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

9-25 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சாத்தனூர் அணைப் பகுதியில் சுற்று லாத்துறையின் மூலமாக தங்கும் விடுதி அமைக்கக்கூடிய செயற் குறிப்பு ஆய்வில் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, திருவண்ணாமலைக்கு அருகிலே சாத்தனூர் அணை இருக் கிறது. தமிழகத்திலேயிருந்து சுற்றுப் பயணம் வருகின்றவர்கள், ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அதைப்போல திருவண்ணா மலை நகரத்திலேயுள்ள அருணாசலேஸ்வரர் கோவில், ரமண மகரிஷியினுடைய கோவிலுக்கு உலக அளவிலே இருந்துகூட சுற்றுலாப்பயணிகள் வருகிறார்கள். ஆனால் தங்குவதற்கு இடவசதி இல்லை. இதை எல்லாம் மனதிலே கொண்டு சாத்தனூர் அணையிலேயும், திருவண்ணாமைல நகரத்திலேயும் இதைப்போன்றதங்கும் விடுதிகள் கட்டப்படுமா? அதற்கான மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணைப்பகுதியில் சுற்றுலாத்துறையின் மூலமாக தங்கும் விடுதி கட்டுகின்ற அந்தப் பணி ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் தொடங்கிய பிறகு, அது அந்த மாவட்டத்தினுடைய தலை நகராக இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் சுற்றுலாத் துறையின் மூலமாக 'ஹோட்டல் தமிழ்நாடு' என்ற அளவிலே நாங்கள் திட்டமிட்டு கட்டிக் கொண்டு வருகிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்கனவே விடுதிகள் இல்லாத இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிலம் ஒதுக்கப்பட்டு தந்தால், அங்கே உடனடியாக 'ஹோட்டல் தமிழ்நாடு' கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நெல்லையில் அப்படிப்பட்ட இடம் ஒதுக்கி தரப்பட்டு இருக்கிறது. புதுக்கோட்டையிலும், தூத்துக்குடியிலும் அப்படித்தான், அதைப்போன்று திருவண்ணாமலையிலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்கப்பட்டு இருக்கிறது. நிலம் ஒதுக்கித் தந்தபிறகு அந்த விடுதி கட்டப்படும். இதனுடைய மதிப்பு ஏறத்தாழ 50 லட்சம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சி தலைவரிடம் இடம் கேட்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். எப்போது கேட்டார்கள்? திருவண்ணாமலையிலே இடம் பஞ்சம் இருப்பதற்கு நியாயமில்லை. இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன? இதைப்போல அந்த மாவட்டத்திலே வேறு எங்கே இப்படிப்பட்ட விடுதிகள் கட்டுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாவட்டம் தொடங்கி சில மாதங்கள்தான் ஆகின்றன. இதுவே காலதாமதம் என்றால், எத்தனையோ ஆண்டுகளாக பல்வேறு திட்டங்கள் கிடப்பிலே கிடந்திருக்கின்றன. அதை என்னவென்று சொல்வது? நானே நேரிலே அங்கே வந்தபோது, ஒரு மாதத்திற்கு முன்பாக போளூர் வந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லியிருக்கிறேன். துறையின் மூலமாகவும் எழுதப்பட்டு இருக்கிறது. அந்த பதில் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர, நம்முடைய உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் ஜவ்வாது மலையிலேயும் கட்டப்படுமா என்று கேட்க விரும்புகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அங்கேயும் நடவடிக்கை எடுக்கப்படும்.

1990 ஏப்ரல் 23]

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே எந்தப் பகுதியிலேயும் சுற்றுலா விடுதிகள் கட்டப்படவில்லை. குறிப்பாக திருவண்ணாமலை பகுதியிலே புகழ்பெற்ற கோவிலும், ரமண மகரிஷியினுடைய ஆசிரமும், மற்றும் சாத்தனூர் அணையும் அருகாமையில் இருக்கிறது. ஏற்கெனவே சுற்றுலாத்துறை மூலமாக கேட்கப்பட்டு நகராட்சி மூலம் $1\frac{1}{2}$ ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்கான திட்டம் ஏதும் தயாரிக்கப்படவில்லை. இதை உடனடியாகச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, $1\frac{1}{2}$ ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருந்தால், மகிழ்ச்சி. சுற்றுலாத் துறை ஏற்றுக்கொள்ளும். நடவடிக்கை எடுக்கப்படும்.

நுகர்பொருள் அங்காடிகளைப் பிரித்தமைத்தல்.

*349 1. திரு. மா. சுந்தரதாஸ்:
திரு. அ. மாரிமுத்து :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நுகர்பொருள் அங்காடிகளில் 500 உணவுப் பொருள் வழங்கும் அட்டைக்குமேல் உள்ள கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு 26—12—1989 ஆம் தேதி அன்று அனைத்து நியாயவிலைக் கடைகளையும் ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு கடைகளிலும் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமல் பார்த்துக் கொள்ளுமாறு ஆணையிட்டுள்ளது. இது படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, ஒரு நியாய விலைக்கடைக்கு ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து அரிசி வாங்க மக்கள் வருகிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள மலையோரப்பகுதிகளிலே உள்ள மக்கள் 15 கிலோமீட்டர் தூரம் நடந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலேயாவது 500-க்கு மேற்பட்ட கார்டுகள் இருந்தால், அங்குள்ள ரேசன் கடைகளை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.